**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 433/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | மணி | **Caste** | : | |
| **Father's Name** | : | குமார் | **Calling** | : | லோடு மேன் |
| **Village** | : | அழகுபட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **36** |
| | | | **Dated** | : | **16.09.2025** |

**16.09.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 திரு.மணி ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா.2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

<u>**எதிரி ஆஜர்**</u>.

1. நான் திண்டுக்கல் அழகுபட்டியில் குடியிருந்து லோடு மேனாக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தில் இறந்த குமார் என தகப்பனார். 27.01.2023ம் தேதி சுந்தராஜ் எனக்கு போன் செய்து என்ஜிஓ காலனி ஒயின்சாப்பில் வேலை செய்து கொண்டிருந்தவர் ஒயின்சாப்பிலிருந்து டீ சாப்பிட சென்றபோது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி ரோட்டை கடந்தபோது இருசக்கர வாகனம் திருச்சி ரோட்டிலிருந்து திண்டுக்கல் நோக்கி வந்த வாகனம் மோதி விபத்து ஏற்படுத்தியதாக தகவல் சொன்னார். தகவல் அறிந்து நான் மருத்துவமனை சென்று பார்த்தேன் எனது தகப்பனாருக்கு இடது தோள்பட்டை மற்றும் தலையில்

காயம்பட்டிருந்தது. பின்னர் இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க தாலுகா காவல்நிலையத்தில் எனது அண்ணன் பிரவு புகார் கொடுத்தார். எனது அப்பாவை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் எனது அப்பாவுக்கு மூளையில் இரத்த கசிவு இருந்ததால் அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –இல்லை**

சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் கேள்விப்பட்டு தான் மருத்துவமனை சென்றேன். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் கேட்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.09.16 17:50:43 +0530

Judicial Magistrate No.I

Dindigul.